# கண்கள் பெற்ற பயன் !




கண்கள் பெற்றப் பயனை யான்,

என்று பெற்றிடுவேன் - என் ;

கண்ணனவனை நேரில் ,

கண்டிடும் நாள் என்னாளோ !

கண்கள்பெற்ற.....

ஆதிமூலமேயென்று வேழமழைத்தபோது ,

ஓடிவந்தே நீயுமதனைக் காக்கவில்லையா ;

நாதியற்ற பாஞ்சாலியுனை அழைத்தபோது ,

தேடிவந்தேயவள் குறைதீர்க்கவில்லையா !

கண்கள் பெற்ற......

காதலனைக் காணவிழையும் காதலியென ,

மாதவனைக்காண விழிகள் துடிக்கின்றன ;

சோதனைசெய்தது போதும் கேசவனேயென் ,

வேதனைதீர்த்திட உடனே நீ வரமாட்டாயா !

கண்கள் பெற்ற......